திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : படி அரிசித் திட்டத்தினால் இந்தச் சர்க்காருக்கு 8·73 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாகக் காணப்படுகிறது. மேலும் படி அரிசித் திட்டத்தை விஸ்தரிப்பதினால் எத்தனை கோடி நஷ்டம் ஏற்படும்? அப்படி விஸ்தரிப்பது இப்போது சாத்தியமா? (திரு. கே. விநாயகம் :— நூறுகோடி).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : படி அரிசித் திட்டத்தினால் 8·73 கோடி நஷ்டம் என்பது தவறானது. அது பலமுறையும் இந்த மன்றத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. எட்டுகோடி சொச்சம் நஷ்டம் என்று மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற எந்த தஸ்தாவேஜிகளிலும் காண முடியாது. சென்னை, கோயம்பத்தூர் பகுதி மக்களுக்கு படி அரிசித் திட்டம் அளிப்பதனால் 40 லட்சம் மக்களுக்கு 4 கோடிதான் ஆகிறது. ஆனால் நான் முன்பு குறிப்பிட்டபடி 42 ரூபாய் அரிசிக்கு 3 ரூபாய் போனஸ் என்று சேர்த்துக் கொடுப்பதனால்

—that is not passed on to the consumer—

பாக்கியுள்ள தொகை எல்லா ஊர்களிலும் உள்ள விவசாய மக்களுக்குத்தான் கொடுக்கிறோம். எல்லா ஊர்களிலும் உள்ள மக்களுக்கு அந்த நன்மை போய்ச் சேருகிறது.

அடுத்து படி அரிசித் திட்டம் இரண்டாம் ரக நெல்லைப் பொறுத்துத் தான் முதல் ரக அரிசிக்குக் கிடையாது. இரண்டாம் ரக அரிசி உற்பத்தியும் இப்போது குறைவாக இருக்கிறது. இன்றைக்கும் தமிழ்நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினை படி அரிசித் திட்டத்தை விஸ்தரிப்பது என்பதல்ல வறட்சி நிலை ஏற்பட்டுள்ள நிலையில் உணவு தானியங்களின் விலை ஏறிவிடாதிருக்க கட்டுப்பாடான விலையில் மக்களுக்கு தானியங்கள் கிடைக்கும்படி செய்வதுதான்.

Scale of pay of Librarians

* 314 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the scale of pay of Librarians in Government Colleges are likely to be revised on a par with U.G.C. scales ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இவ்விஷயம் பரிசீலனையிலிருக்கிறது.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவப்படி

***315 வினா—திரு. எம். பூபதி** : மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப் பட்டு வந்த வைத்திய அலவன்சை 1958-ம் ஆண்டுக்குப் பின் நிறுத்திய காரணம் என்ன?

(இ) ஆசிரியர்கள் பெற்று வந்த இந்தச் சிறு சலுகையை மீண்டும் அளிக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எந்த விதமான வைத்திய அலவன்சும் எந்த காலத்திலும் அளிக்கப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.